வடலிகள் வானுயரும்

# வடலிகள்

செப்ரெம்பர் - ஒக்ரோபர் - நவம்பர் 2016



# பறவைகள் பலவிதம்



பறவை இனங்களில், மிக நீளமான அலகினைக் கொண்ட பறவை இனம் அவுஸ்திரேலியன் பெலிகன் ஆகும். இதன் அலகின் நீளம் சராசரியாக 18.5 அங்குலங்கள் (47 சென்ரி மீற்றர்கள்).

இந்த நீர்வாழ்ப் பறவை இனங்கள் பொதுவாக அவுஸ்திரேலியா, நியூ கினியா, பிஜி, இந்தோனேசியாவின் சில பகுதிகள், மற்றும் நியூசிலாந்தில் காணப்படுகின்றன.



ஹம்மிங் பேர்ட் பறவைகள் செயற்பாட்டில் இருக்கும்போது நிமிடமொன்றுக்கு 300 – 500 தடவைகள் சுவாசிக்கும். ஹம்மிங் பேர்ட் பறவையின் உடற்பருமனில் அண்ணளவாக 20 வீதம் வகிபாகத்தினை இதயம் பெறுகின்றது. பறவைகளினையும், அதன் செயற்பாட்டினையும் பொறுத்து ஹம்மிங் பேர்ட் பறவைகளின் இதயத்துடிப்பு நிமிடமொன்றுக்கு 30 – 1500 தடவைகள் ஆகும். ஹம்மிங் பேர்ட் பறவைகள் 10 நிமிடத்திற்கொருதடவை சாப்பிட்டுக்கொண்டே இருக்குமாம். இவை நாளாந்தம் அதனது உடல் நிறையில் மூன்றில் இரண்டு பங்களவான உணவினை உட்கொள்கின்றதாம்.



பறவை இனங்களில், அதிக நிறையினைக் கொண்ட பறக்கும் பறவை இனம் பஸ்ராட் ஆகும். இதன் நிறையினை குறிப்பிடுவதாயின் சராசரியாக ஒரு ஆறு வயது மனிதக் குழந்தையின் நிறையினை ஒத்ததாகும்.

**வடலிகள்**

நிர்வாக ஆசிரியர்
சுந்தரம் டிவகலாலா

ஆசிரியர் குழு
விவேக்
ந.அனந்தராஜ்
ஜனதா ஜோர்ஜ்

ஆலோசகர் குழு
செல்வி.ஜெயா தம்பையா
செ.மகேசு
மத்தியு
புவி
தர்மபாலன்
தில்லைநாதன்
சந்துரு
அஜந்தன்

சஞ்சிகை வடிவமைப்பு
அல்பேட் பெஸ்ரியன்

வெளியீடு
ஆறுதல் நிறுவனம்

முகவரி
இல.51, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.


தொலைபேசி
021 221 7092

தொலைநகல்
021 221 7092

மின்னஞ்சல்
aaruthaltrinco@gmail.com

இணையதளம்
www.aaruthal.lk

விலை : 50 ரூபாய்



## வடமாகாண முன்பள்ளி பணிப்பாளர் செல்வி. ஜெயா தம்பையா அவர்களின் வாழ்த்துச் செய்தி



2016ம் ஆண்டு, முதன்முதலில் முன்பள்ளி ஆசிரியர்கள், சிறுவர்களுக்காக ஆறுதல் நிறுவனத்தினால் வெளியிடப்படும் 'வடலிகள்' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு குழந்தையின் கல்வியில் ஆரம்பப் பருவம் என்பது மிகவும் அத்தியாவசியமானதாக அமைகின்றது. கற்றலுக்கான அடித் தளம் இடப்படுகின்ற இடமும் முன்பள்ளியே ஆகும். இந்த வகையில், வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் திட்டமிட்ட முறையில் முன்பள்ளிச் செயற்பாடுகள் கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முன்பள்ளிச் செயற்பாடுகளுக்கு பல்வேறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவி வருகின்றன. அந்தவகையில் ஆறுதல் நிறுவனம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயற்பாடுகளில் பெரும்பங்காற்றி வருகின்றது. ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி, குறுங்காலப் பயிற்சிகள் மற்றும் குழந்தைகளுக்கான செயல்நூல்கள் என்பவற்றினைத் தயாரித்து ஆரம்பக் கல்விக்கு உதவி வருவதோடு தற்போது பல்வேறு விடயங்களை உள்ளடக்கி 'வடலிகள்' சஞ்சிகை வெளியிடப்படுவது மகிழ்ச்சியைத் தருகிறது.

'வடலிகள்' பல விடயங்களைத் தாங்கி வருகிறது. குழந்தைகளுக்கான சிறுகதைகள், பாடல்கள், செயற்பாடுகள், முன்பள்ளி பற்றிய வரலாறு மற்றும் பொது அறிவுக்கான விடயங்கள் உள்ளடக்கப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.

இச்சஞ்சிகை எமது குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு மிகவும் பயனுடையதாகும். இச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு இதனை தயாரித்து வெளியிட முன்வந்த ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களுக்கும் இச் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

**வடலிகளை வானுயர்த்தும் நோக்கில்...**

ஆறுதல் நிறுவனத்தின் மற்றுமொரு வெளியீடாக 'வடலிகள்' சஞ்சிகை இப்போது உங்கள் கைகளில் தவழ்கிறது. முன்பள்ளி சிறார்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு இந்த சஞ்சிகையும் துணைபுரியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

முன்பள்ளி சிறார்களுக்கு மட்டுமல்லாமல், ஐந்தாம் ஆண்டு வரையிலும் பயிலும் மாணவர்களை இலக்கு வைத்தே இதன் ஆக்கங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. எனினும், ஆரம்ப பிள்ளைப் பருவத்தினரை நோக்கியதான ஆக்கங்களே அதிகம் உள்ளது.

ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கும், அம்மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் 'வடலிகள்' சஞ்சிகை பயனளிக்க வேண்டும் என்பதே எமது விருப்பம். வடலிகளை வானுயர்த்தும் குறிக்கோளுடன் வரும் இந்த சஞ்சிகை பிள்ளைகளாகிய உங்களின் மகிழ்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் துணை நிற்க வேண்டும் என்பதே எங்கள் அவா.

**– ஆசிரியர் குழு**

# போட்டிச் சண்டை ஆபத்தானது

ஒரு சுனையில் தண்ணீர் குடிப்பதற்குச் சிங்கமும் பன்றியும் வந்தன. யார் முதலில் குடிப்பது என்பதைப் பற்றி இரண்டிற்கும் விவாதம் ஏற்பட்டுச் சண்டையில் வந்து முடிந்தது. இரண்டும் பலமாய்ச் சண்டைபோட்டு, களைத்துப் போய் இளைப்பாற உட்கார்ந்தன.

சண்டையில் யார் செத்தாலும் அதைச் சாப்பிடுவதற்கென்று தூரத்தில் கழுகு ஒன்று உட்கார்ந்திருப்பதை அப்பொழுது அவை பார்த்தன. அச்சமயமே இரண்டிற்கும் ஞானோதயம் ஏற்பட்டது. உடனே இரண்டும், "இந்தக் கழுகுக்கு இரையாவதை விட நாம் நண்பர்களாய் இருப்பதே நல்லது" என்று சொல்லி நண்பர்களாயின ●



## கூடி வாழ்வோம்



பறவை எல்லாம் பாடின
பக்கம் வந்து தேடின

கறவை மாடு சிரித்தது
கறந்து பாலும் தந்தது.

குடித்து பறவை மகிழ்ந்தது
கூட்டம் சேர கத்துது

பசிக்கு இங்கே வந்திட
பாடிப் பாடி அழைத்தது!

எங்கிருக்கும் பறவையும்
எகிறிப் பறந்து வந்தது!

இனத்தின் குரலைக் கேட்டது
இறங்கி வந்து பார்த்தது!

கோமாதா நமக்கு எல்லாம்
குடிக்க பாலும் தந்தது!


பாதுகாக்கும் தாயாக
பட்டி தொட்டி சொல்லுது

பறவைக் கூட்டம் நாமெல்லாம்
போற்றி அதை வணங்குவோம்


சிறகாய் நாமும் இருந்துமே
பறக்க வைத்து மகிழுவோம்..!

# நேரம் அறிதல்

பண்டைக் காலத்தில் நேரத்தைக் கணக்கிட நிழற்கடிகாரம் பயன்படுத்தப்பட்டது. வெயிலைக் கொண்டு நேரம் கண்டு பிடிக்கும் இக் கடிகாரத்தை உருவாக்க நிலத்தில் ஒரு கம்பை நாட்டி அதைச் சுற்றிலும் வட்ட வடிவமான கோடு வரைந்து (டயல்) மணி குறிக்கப்பட்டது. வானத்தில் சூரியனின் நிலைக்கேற்ப கம்பின் நிழல் வட்டத்துள் படியும். இதனைக் கொண்டு நேரம் கணித்தனர்.



இதன் பின்னர் நீர்க் கடிகாரம் உருவாக்கப்பட்டது. ஒரு பாத்திரத்தில் சிறியதொரு துளையிட்டு அதனை நீர்த் தொட்டியில் மிதக்க விடுவர். துவாரம் வழியாக நீர் நிரம்புவதைக் கொண்டு நேரம் கணிக்கப்பட்டது.



அதன் பின்னர் மணற் கடிகாரம் பயன்பாட்டிற்கு வந்தது. ஒரு பாத்திரத்தை மணலால் நிரப்பி அதனடியில் துளையிடப்பட்டது. கீழே ஒரு பாத்திரம் வைக்கப்படும். மேலே உள்ள பாத்திரத்தில் இருந்து கீழே வைத்துள்ள பாத்திரத்துக்குள் மணல் முழுதும் விழும் நேரத்தைக் கொண்டு காலத்தை அளவிட்டனர்.



முன்னர் இங்கிலாந்தில் எரியும் மெழுகு வர்த்தியைக் கடிகாரமாகப் பயன்படுத்தினர். பெண்டுலத்தின் தத்துவம் கண்டறியப்பட்டதன் பின்னரே நவீன கடிகாரங்களின் உருவாக்கம் வளர்ச்சி அடைந்தது ●



# நாய்க்குட்டி சொன்ன நீதி

ஒரு வீட்டில் நாய்க் குட்டி ஒன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க் குட்டி காகத்துடன் நட்பாக இருந்தது. ஒரு நாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது.

இதைக் கண்ட நாய்க் குட்டி காகத்திடம் சென்று, என்ன காக்கையாரே ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்? என்று கேட்டது.

அதற்கு காகம், மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகின்றார்கள் ஆனால், என்னை வெறுத்து, கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்? என்று கேட்டது காகம்.

இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான். இதை இல்லாதொழித்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள் என்றது நாய்க் குட்டி.



எங்களிடம் அப்படியென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள்தான் சிறந்தவர்கள் என்று சொன்னது காகம்.

உண்மைதான்! என்றது நாய்க்குட்டி.

பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத் தந்ததும் நாங்கள்தான் என்று பெருமையோடு சொன்னது காகம். ஆமாம் அதுவும் உண்மைதான் என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி.

இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்? குயில் கூவும் போது அதன் இனிமையை இரசிக்கிறார்கள். மயிலாடும் போது அதை இரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்து பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்? என்று மீண்டும் கேட்டது காகம்.

ஏன் என்று நான் சொல்லுகிறேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும். உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால் தான் மனிதர்கள் உங்களை வெறுக்கிறார்கள், என்று கூறியது நாய்க்குட்டி.

அப்படி என்ன தீய குணங்கள்? என்று கேட்டது காகம்.

திருடுதல், ஏமாற்றுதல் என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலை குனிந்தது.

**நீதி: ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும். அவரின் ஒரு சிறு தீயசெயல் அவரை, அவரின் அத்தனை நல்ல பண்புகளில் இருந்தும் மறைத்து அந்தத் தீயசெயலே முன்னிற்கும்.**


நிம்மி
வீடு செல்ல வழிகாட்டுங்கள்
வழி மறந்து போன நிம்மிக்கு வீட்டுக்கு வர வழிகாட்டுவீங்களா?
தொடக்கம்
முடிவு
விலங்குப் பண்ணை



# நூலகங்களின் வரலாறு

நூலகம் என்பதை நாம் வாசிகசாலை படிப்பகம் நூல் நிலையம் என்று பல்வேறு விதமாகக் கூறி வருகின்றோம். லைபிரறி என்பது லிபர் என்ற லத்தின் வார்த்தையிலிருந்து உருவாகியதாகும். லிபர் என்பதற்கு நூற்றொகுதி என்று பொருள் கொள்ள லாம். நூல்களைச் சேகரித்து வைக்கும் இடம் என்பதாலேயே லைபிரறி என்ற பெயர் பயன்படுத்தப் பட்டது.

நூலகங்கள் உலகில் காகிதம் தயாரிக்கப் படுவதற்கு முன்னதாகவே உருவாகி விட்டதற்கான வரலாற்றாதாரங்கள் உள்ளன. களிமண்ணைப் பிசைந்து தட்டையாக உருவமமைத்து அதன் மீது கூரிய ஆயுதத்தால் எழுதிக் காயவைத்து எடுத்ததே ஆரம்பகால நூல்களாக விளங்கின. பாபிலோன் நகரில் இத்தகைய மண்ணாலான குறிப்புக்கள் ஏராளம் அகழ்வாராச்சிகளின் போது எடுக்கப்பட்டுள் ளன. இவை கிறீஸ்துவிற்கு முன் 5000 ஆண்டுகள் வரையில் பழமை மிக்கவை என்று கூறப்படுகின்றது. எகிப்தில் நூல்கள் மரப்பட்டைகளில் தயாரிக்கப் பட்டுள்ளன. இவை தவிர மாட்டுத்தோல் ஓலைச் சுவடிகள் கோரைப் புற்கள் மரப் பலகையில் மெழுகைத் தடவி அதன் மீது எழுதும் மெழுகோடு [Codex] போன்றவற்றினாலும் நூல்கள் தயாரிக்கப் பட் டுள் ளன.

இன்று நாம் பயன்படுத்தும் காகிதம் சீனாவிலேயே கண்டுபிடிக்கப்பட்டதென்பர். சேர் அவிரியல் ஸ்ரைன் என்பவர் மிகப் பழமையான கடதாசித் துண்டுகளை சீனாவைச் சார்ந்த துருக்கிப் பகுதியில் கண்டெடுத் தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அரேபியர் கடதாசி யையும் அதன் பாவனையையும் ஐரோப்பா முழு வதற்கும் ஸ்பெயின் வரைக்கும் எடுத்துச் சென்றார் கள். ஐரோப்பாவில் கிடைத்த மிகப் பழமையான கட தாசிப் பத்திரம் 11ம் நூற்றாண்டுக்குரியதாகும். பப் பிரஸ் என்ற தாவரத்திலிருந்து கடதாசி தயாரிக்கப் பட்டதால் அத் தாவரத்தின் பெயரை அடிப்படை யாகக் கொண்டு பேப்பர் என்ற சொல் வழக்கில் வரலாயிற்று.



இன்று பல்வேறு பிரிவுகளாக நகரத்திலிருந்து கிராமம் வரை சென்று சேவையாற்றும் வாய்ப் பினைப் பெற்றிருக்கும் நூலகங்களின் ஆரம்ப வரலாறு சுவையானது. அரண்மனைகளிலும் மடால யங்களிலும் கோயில்களிலும் ஆரம்பகால நூல் நிலையங்கள் இயங்கி வந்துள்ளன.

கி.மு 1400 இல் எகிப்தை ஆண்ட ரமேஸஸ் என்ற மன்னரிடம் பெரிய நூலகம் ஒன்று இருந்துள்ளது. கி.மு 5ம் நூற்றாண்டில் ஏதன்ஸ் நாட்டினர் எகிப்து மீது படையெடுத்த போது அங்கு கோயில்களிலும் மன்னர்களின் சமாதிக் கட்டிடங்களிலும் சுமார் 36000 நூல்கள் இருந்ததைக் கண்டறிந்ததாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர்.

உலகின் முதலாவது நவீன நூலகம் ஐக்கிய அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் 1754ம் ஆண்டில் உருவாகியது. இலங்கையில் நூலக வரலாறு கி.மு 103-77 ஆண்டுப் பகுதிகளில் ஆரம்பித்தது எனலாம். இக்காலங்களில் கோவில்களையே நூலகங்களாகவும் பயன்படுத்தினர். ஆனால் சந்தா செலுத்தும் நவீன நூலகங்கள் பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலேயே உருவாகின. இலங்கையின் முதல் நவீன நூலகம் 19ஆம் நூற்றாண்டில் கொழும்பில் உருவாக்கப்பட்டது. 1813ஆம் ஆண்டு இராணுவத்தினரின் பாவனையின் பொருட்டு யுனைட்டட் சேவிஸ் **(United Service Library)** என்ற நூலகமும், 1824ஆம் ஆண்டு கொழும்பு நூலகமும் **(Colombo Library)**, 1829ஆம் ஆண்டு சட்டத்தரணிகள் சிவில் உத்தியோகஸ்தர்கள் ஆகியோரின் பாவனைக்காக பெட்டா நூலகமும் **(Prttah Library)** ஆரம்பிக்கப்பட்டன.

தொடர்ந்து இயங்குவதில் ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக யுனைட்டட் சேர்விஸ் நூலகம் கொழும்பு நூலகத்துடன் 1874 இல் இணைந்து கொண்டது. 1874ஆம் ஆண்டிலிருந்து முதலாவது உலக யுத்தம் வரையிலான காலப்பகுதியில் பின்னைய இரு நூலகங்களும் அரசாங்கத்தின் மாணியத்தை பெற்று இயங்கிவந்தன. முதலாம் உலக யுத்தத்தை அடுத்து இந்த மானியம் நிறுத்தப் பட்டது. பெருமளவு சந்தா நிலுவை காரணமாக இயங்க முடியாத நிலையை அடைந்த இவ்விரு நூலகங்களும் 1924ஆம் ஆண்டில் சேர் சந்திரசேகர நிதியம் என்ற அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் இந்த நிதியத்திடம் இருந்து கொழும்பு மாநகர சபை 1925ஆம் ஆண்டில் 20000 நூல்களுடன் இரு நூலகங்களையும் பொறுப்பேற்றுக் கொண்டது. அன்று முதல் கொழும்பு பொதுநூலகம் என்ற பெயரில் இது இயங்கி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் 1842 ஆண்டில் பொதுநூலகம் ஆரம்பமாயிற்று பிரதான நீதிமன்றச் செயலாளர் சீ.சிரினியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலகம் பெரும்பாலும் சட்டத்தரணிகளாலேயே பயன்படுத்தப் பட்டது. இன்றைய யாழ்.பொதுநூலக அமைப்பு இங்கு 1933 ம் ஆண்டில் உருவாகியது. இலங்கையில் 1945 இல் இலவசக் கல்வி அமுலுக்கு வந்த பின்னர் பொதுநூலகங்களும் பாடசாலை நூலகங்களும் தத்தம் சேவைகளை விரிவு படுத்த வேண்டிய கட்டாயநிலை உருவாகியது. 1960ம் ஆண்டளவில் பாடசாலை நூலகங்கள் தொடர்பான முதலாவது சட்ட மூலம் இலங்கையில் இயற்றப்பட்டது. பின் 1967 இல் இலங்கையின் கல்வி நூற்றாண்டை முன்னிட்டு அநேக பாடசாலைகளில் நூலகங்கள் உருவாக்கப்பட்டு வளர்ச்சி அடையலாயின ●



# தோட்டக்காரனும் தேன்கூடும்




தோட்டக்காரன் ஒருவன் தனது தோட்டத்தில் ஒரு அப்பிள் மரத்தை வளர்த்து வந்தான். அந்த அப்பிள் மரம் நீண்ட காலமாக காய்ப்பதில்லை. ஆனால் குருவிகளுக்கும் வெட்டுக் கிளிகளுக்கும் தங்குமிடமாய் இருந்தது.

இந்த பயனற்ற மரத்தை வெட்டி விடுவதே நல்லது என்று தோட்டக்காரன் நினைத்தான். அதற்காக கோடரியை எடுத்துக் கொண்டு மரத்தினருகில் வந்தான். அதனைப் பார்த்த குருவிகளும் வெட்டுக்கிளிகளும் மரத்தை வெட்ட வேண்டாமென அவனிடம் கெஞ்சின. தாங்கள் பாட்டுப் பாடி அவனை மகிழ்விப்பதாக கூறின. ஆனால் தோட்டக்காரன் அதற்கு செவி சாய்க்கவில்லை. கோடரியை எடுத்து மரத்தை வெட்ட ஆரம்பித்தான.

அச்சமயம் மரத்தில் ஒரு பொந்து தென்பட்டது. அதற்குள்ளே என்ன இருக்கிறது என்று எட்டிப் பார்த்தான். அங்கே ஒரு பெரிய தேன்கூட்டில் தேன் நிறைந்து காணப்பட்டது. அதனைக் கண்டதும் அவனுக்கு சந்தோசம் பொங்கியது. மரத்தை வெட்டாமல் விட்டுவிட்டு தேனை முழுவதும் எடுத்துக் கொண்டு,"இந்தமரம் இல்லாவிட்டால் இந்த இனிய தேன் எனக்கு கிடைத்திருக்குமா" என்று தனக்குள் எண்ணியபடி சென்றான்.

**சுயநலமின்றி சிலர் எந்தக் கருமத்தையும் செய்வதில்லை.**



வண்ணம் தீட்டுங்கள்!

# கண் பார்வையற்றவனும், நடக்க இயலாதவனும்

பார்வையற்ற ஒருவன் வீதி வழியாகச் சென்றான். வீதி பள்ளமும் மேடுமாய் இருந்ததால் நடக்க முடியாமல் தவித்தான். இச்சமயம் அங்கே கால்கள் ஊனமுற்ற ஒருவனை சந்திததான். தன்னை வழிகாட்டி அழைத்துப் போகும் படி அவனிடம் பார்வையற்றவன் கேட்டான்.

ஊனமுற்றவனோ "என்னாலோ நடக்க இயலாது. நான் எப்படியப்பா உனக்கு வழிகாட்ட முடியும்? ஆனால் ஒன்று செய்யலாம். நீ பலசாலியாய் இருக்கிறாய். என்னை நீ சுமந்து நடப்பாயானால் நான் உன் தோள்மீது இருந்து உனக்கு வழிகாட்டுவேன். இருவரும் ஒருவருக்கொருவர் உதவியாய் இருந்து உலகில் வாழலாம். நான் உன் கண்ணாய் இருப்பேன். நீ என் காலாய் இருப்பாய்" என்று சொன்னான்.



பார்வையற்றவன் "எனக்கு முழு சம்மதம். இப்பொழுதே புறப்படுவோம்" என்று கூறினான். பார்வையற்றவன் ஊன முற்றவனை தன் தோளில் சுமந்தபடி புறப்பட்டான். அன்று முதல் இருவரும் மகிழ்ச்சியாய் இருந்தனர்.

**ஒத்துழைப்பால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை**

# மழை பெய்யும்



வானம் கறுத்தால், மழை பெய்யும்
மழை பெய்தால், மண் குளிரும்
மண் குளிர்ந்தால், புல் தழைக்கும்
புல் தழைத்தால், பசு மேயும்
பசு மேய்ந்தால், பால் சுரக்கும்
பால் சுரந்தால், கன்று குடிக்கும்
கன்று குடித்து மிஞ்சியதை
கறந்து நாமும் வந்திடலாம்
காய்ச்சி நாமும் குடித்திடலாம்.







## மயிலே மயிலே..

மயிலே, மயிலே ஆடி வா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடி வா
கோவைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே பறந்து வா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்து வா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கி வா
மடியில் குந்திப் பேசலாம்!

# ஒற்றுமையே பலம்

நான்கு காளைகள் மிகவும் நட்பாய் இருந்தன. மேயப் போகும்போது நான்கும் ஒன்று சேர்ந்தே போகும். ஒன்றை விட்டு ஒன்று பிரியாது. அவற்றைக் கொன்று தின்ன வேண்டுமென்று ஒரு சிங்கம் நெடுநாட்களாக விரும்பியது.

ஆனால் நான்கும் ஒன்று சேர்ந்தே எப்பொழுதும் இருந்தபடியால் அவற்றை எதிர்க்கப் பயந்து, அவற்றைப் பிரித்து விடுவதற்கு வழி என்னவென்று சிங்கம் யோசித்தது. இறுதியாக காளைகள் ஒவ்வொன்றுக்குமிடையே பொறாமை உண்டாகும்படி செய்தது. பொறாமையினால் நான்கும் பிரிந்து வெவ்வேறு திசைகளில் போய் மேய ஆரம்பித்தன. அதன் பின்னர் சிங்கம் சுலபமாக ஒவ்வொரு காளையாக அடித்துத் தின்றது.



ரஷ்ய குட்டிக் கதை

# ஒத்துழைப்பு

பசி தாங்க முடியாத எலிகள் இரண்டு தாங்கள் ஒளிந்திருந்த வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பெரிய பானை நிறைய பால் இருப்பதைக் கண்டன. ஆனால் அது உயரமான பானை. இதனால் பாலைக் குடிக்க முடியாமல் எலிகள் திண்டாடின.

இதையடுத்து இரு எலிகளும் ஒரு முடிவுக்கு வந்தன. ஓர் எலியின் மீது இன்னோர் எலி ஏறி பாலைக் குடிப்பது. அதன் பிறகு கீழே உள்ள எலி மேல் ஏறி பாலைக் குடிக்கலாம் என திட்டமிட்டு. அதை செயல்படுத்தின.


அதன்படி மேலே உள்ள எலி பாலைக் குடித்த போது, கீழே இருந்த எலி கத்தியது: "போதும், நான் பால் குடிக்க வேண்டும்..."

கீழே இருந்த எலி போட்ட சத்தத்தை கேட்டு மிரண்டு மேலே இருந்த எலி, பால் பானைக்குள் விழுந்து விட்டது.

இதைக் கண்ட கீழே இருந்த எலி, "நல்லது, இனி எனக்குத்தான் எல்லா பாலும்" என்று நினைத்தது. பிறகு அந்தப் பானையைச் சுற்றி சுற்றி வந்தது. ஆனால் மேலே ஏற முடியவில்லை. கடைசியில் பசியால் அது செத்துப் போய்விட்டது.

**துன்பத்தில் இருந்து விடுதலை அடைய மற்றவர்களின் ஒத்துழைப்புத் தேவை.**





# யானை

யானை பெரிய யானை
யார்க்கும் அஞ்சா யானை
பானை வயிற்று யானை
பல்லைக் காட்டா யானை
முறத்தைப் போலகாது
முன்னால் வீசும் யானை
சிறிய கோலிக் குண்டாம்
சின்ன கண்கள் யானை
முன்னங்காலை மடக்கி
முட்டிபோட்டு படுக்கும்
சின்னக் குழந்தை ஏற்றி
சிங்காரமாய் நடக்கும்.




# செருப்பு!

ஆதிகால மனிதன் கல்லும் முள்ளும் நிறைந்த பாதைகளில் நடக்க வேண்டியிருந்தது. ஆதலால் தனது கால்களைப் பாதுகாத்துக் கொள்ள மிருகங்களின் தோல், மரப்பட்டை என்பவற்றைக் கணுக்காலுடன் சேர்த்து தோல் வாரினால் கட்டிக் கொண்டான்.

நாகரிக மக்களில் முதன்முதல் செருப்பைத் தயாரித்தவர்கள் எகிப்தியர்களே. அவர்கள் தோல், நாணற்புல் ஆகியவற்றால் செய்த பட்டிகளை இரண்டு தோல் வார்களால் கால்களுடன் சேர்த்துக் கட்டிக் கொண்டார்கள். இவ்வாறு வளர்ந்து, செருப்புக்கள் இன்று தோல், இறப்பர் உட்பட பல்வேறு நவீன பொருட்களைக் கொண்டு, தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு, நவீன வடிவமைப்பு முறைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

புள்ளிகளை இணைத்து
உருவமாக்குங்கள்!





# அதனை அதன் போக்கிலேயே விடு!

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தார். ஒரு ஏரியை எதிர் கொண்ட போது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரும் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள். புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர்கொண்டு வரச் சொன்னார்.

சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக்கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார்.

அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏரியைக் கடந்து சென்றார். ஏரி கலங்கி விட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப்படுத்தி, பாரப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப் பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டு போய்க் கொடுப் பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பி விட்டார். அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார்.

ஒரு மணி நேரம் சென்ற பிறகு, புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்றுவரப் பணித்தார்.

நீர் நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது. சகதி நீரின் அடியிற்சென்று பதிந்திருந்தது. ஒரு பானையின் தண்ணீரை முகர்ந்து கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான்.

புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.

தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்?

நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!

நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய். அது தானாகவே சுத்தமாயிற்று. அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா? என்றார் புத்தர் ■



# எவரையும் ஏளனம் செய்யாதே!

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை
புனிதமான கடவுளை
பூசை செய்ய உதவுதே!

அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்
கழுத்தில் நல்ல மாலையாய்
கட்டி மகிழ உதவுதே!

கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமோ
இன்பம் இன்பம் என்று தாம்
இன்னும் கேட்க செய்யுதே!

விசத்தில் மிக்க பாம்பிடம்
விலையுயர்ந்த இரத்தினம்
அடடா அந்த இரத்தினம்
மனிதருக்கும் கிட்டுமோ?

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோசா மலருதே
வீசி நல்ல மணத்திலே
விரும்பி அணிய செய்யுதே!

மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டு
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்யாதே!

மரக்கிளையின் உச்சியில் இருந்த அந்தச் சின்னஞ்சிறு பறவையின் கூட்டில் இரண்டு குஞ்சுகள் இருந்தன. தாய்ப் பறவை எங்கோ சென்று இரை தேடிக் கொண்டு தன் குஞ்சு களுக்குப் புகட்ட திரும்பி வந்த போது திடுக்கிட்டு அலறியது.

ஒரு பாம்பு மெதுவாக ஊர்ந்தபடி அந்தக் கூட்டை நெருங்கியது. அந்தப் பறவைக் குஞ்சுகளை உண்பது அதன் நோக்கம்.தாய்ப் பறவையால் அந்தப் பாம்பை என்ன செய்ய முடியும்? பாம்பண்ணா! பாம்பண்ணா! என்று அலறியது.

பாம்பு கவனத்தில் கொள்ளவில்லை.

பாம்பண்ணா! பாம்பண்ணா! ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேளண்ணா! என மீண்டும் மீண்டும் தாய்ப்பறவை அலறியது. திரும்பிப் பார்த்த பாம்பு, ஏன் எதற்காகக் கத்துகிறாய்? என்றது.




அண்ணா! நீங்க எவ்வளவு பெரியவர் உங்களைக் கண்டு பயந்து போய் இருக்கிற எங்கள் மேல் நீங்கள் இரக்கப்படக் கூடாதா? என்றது காகம்.

உன் வாயிலே என்ன வைத்திருக்கின்றாய் என்று கேட்டது பாம்பு.

என் குஞ்சுகளுக்கு கொஞ்சம் இரை கொண்டு வந்தேன் அண்ணா என்றது காகம்

அது என்ன இரை? என்றது பாம்பு.

சின்னப் புழுக்கள் அண்ணா என்றது காகம்.

இப்போது சொல் நீ ஏன் அந்தப் புழுக்களுக்கு இரக்கம் காட்டவில்லை?

அந்தப் பறவையால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை.

இது தான் விதி என்றது பாம்பு. இருந்தாலும் என்னை அண்ணா என்று அன்போடு பலமுறை கூப்பிட்டதால் என் பசிக்கு நான் வேறு வழியை பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி விட்டு பாம்பு போய்விட்டது. அந்தத் திசையையே பார்த்துக் கொண்டு திகைத்து நின்றது தாய்ப்பறவை ●

# தந்தை மகன் கழுதை!





ஒரு தந்தையும் மகனும் தங்களுடைய கழுதையை விற்பதற்காக சந்தைக்கு ஒட்டிச் சென்று கொண்டிருந்தனர். அதைப் பார்த்த வழிப்போக்கர்கள் சிலர் இவர்களைப் பார்த்து, "இவர்களைப் பார் அற்புதமான கழுதையை ஓட்டிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருக் கிறார்கள். இவர்களில் யாராவது அதில் ஏறிச் செல்லலாம். ஆனால் இவர்களுக்கு பொருளைக் கொடுத்த கடவுள் அதைப்பயன்படுத்த அறிவைக் கொடுக்கவில்லை" என்று ஏளனம் செய்தனர்.

இதனால் வெட்கப்பட்டுப் போன தந்தையும் மகனும் ஒரு முடிவு செய்து, வயதில் சிறிய வனான மகன் கழுதையின் மேல் உட்கார்ந்து கொண்டு, தந்தை நடந்தவாறே இருவருமாகப் போனார்கள். அப்போது வேறு சில வழிப் போக்கர்கள், "இங்கே பார் அநியாயம்! பெரியவர் நடக்க முடியாமல் நடக்கிறார். இந்த வாலிபப் பையன் சொகுசாக கழுதை சவாரி செய்கிறான்" என்று கிண்டலடித்தனர்.

இதைக் கேட்டு இவர்கள் கூறுவதில் நியாயம் இருப்பதாக உணர்ந்த பையன், தந்தையைக் கழுதையில் உட்காரவைத்து இருவரும் புறப் பட்டனர். இன்னும் சற்று தூரம் சென்ற பின் ஒரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து "கலி முற்றிவிட்டது, தைரியசாலியாக இருக்கின்ற பெரியவர், ஒரு நோஞ்சான் பையனை நடக்க விட்டு தான் மட்டும் சொகுசாக கழுதை மேல் ஏறிப்போகிறார்" என்றான்.

வழக்கம் போல இதைக் கேட்ட தந்தை-மகன் இருவரும் ஒரு சேர கழுதை மேல் ஏறிக் கொண்டனர். இனி இந்த உலகம் தங்களைப் பார்த்துக் கேலி பேசாது என்று தந்தை கூறினார்.





கொஞ்ச தூரம் சென்ற பின் இன்னொரு வழிப் போக்கன் இவர்களைப் பார்த்து "இரண்டு தடியன்கள், ஒரு நோஞ்சான் கழுதையின் மேல் ஏறி சவாரி செய்கிறார்கள் இரக்கங்கெட்ட ஜென்மங்கள்!" என்று காட்டமாக விமர்சித்தான்.

இதைக் கேட்டு வருந்திய தந்தையும், மகனும் கழுதையிலிருந்து குதித்தனர். இனி என்ன செய்வது? என்று சிந்தித்தனர். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு "மக்கள் மனம் மகிழ கழுதையை நாம் கட்டித் தோளில் சுமந்து செல்வோம்!" என்று முடிவு செய்தனர்.

அவ்வாறு கழுதையைத் தோளில் சுமந்து செல்கையில் வழியில் ஒரு காட்டாறு குறுக் கிட்டது. அதைக் கடக்கையில் கழுதை மிரண்டு போய் வெள்ளத்தில் விழுந்தது. கால்கள் கட்டப் பட்டிருந்ததால் அதனால் நீந்த முடியவில்லை! எனவே அது ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. தந்தையும் மகனும் செய்வ தறியாது திகைத்து நின்றனர்.

# தம்பாட்டி காந்திஜி முன்பள்ளியின் வரலாறு

சப்த தீவுகளில் ஒன்றாகத் திகழும் ஊர்காவற்றுறை என்னும் பிரதேசத்தில் தம்பாட்டி என்னும் கிராமத்தில் 1978ஆம் ஆண்டு காந்திஜி முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. இந்த முன்பள்ளியானது முன்னர் கடை போன்ற அமைப்புக் கொண்ட இடத்தில் இயங்கியது. பின்னர் மாணவர்களின் அதிகரிப்பினால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டபோது அப்பகுதியில் அமைந்திருந்த சன சமூக நிலயத்தில் இப்பள்ளி இயக்கப்பட்டது.

இதன் பின்னர் இக்கிராமத்தைச் சேர்ந்த பெரியவரான பொன்னுச்சாமி குமாரசாமி அவர்கள் மனமுவந்து முன்பள்ளிக்கான காணியினை அன்பளிப்புச் செய்துள்ளார். அக்காணியின் அன்பளிப்பிற்கு பின்னர் போரூட் நிறுவனம் 1989ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி முன்பள்ளிக்குரிய கட்டடத்தினைத் தந்துதவியது. இதன் மூலம் இந்த முன்பள்ளி சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. 50இற்கு மேற்பட்ட மாணவர்களை இரண்டு ஆசிரியர்கள் கற்பிக்க ஆடல் பாடல்களுடன் குதூகலமாக இம் முன்பள்ளி நடைபெற்று வந்தது. ஆயினும் இந்த முன்பள்ளி சகல வசதிகளையும் கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் 1990 ஆம் ஆண்டின் அசாதாரண நிலைமைகளால் ஏற்பட்ட இடப்பெயர்விற்கு பின்னர் ஓரளவு சுமுகநிலை ஏற்பட்டதும், மீண்டும் 1996 ஆம் ஆண்டு முதல் இப்பள்ளி சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, 70 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இப்பள்ளிக்கு வருகைதந்த போதிலும் போதிய வகுப்பறை, விளையாட்டிட வசதிகளும், பாதுகாப்பான சுற்று வேலிகள் மற்றும் மின்சார வசதிகள் என்பன ஏற்படுத்தப் படாமையால், மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

ஆயினும், பெற்றோர்களின் உதவியுடன் பனை மட்டைகளாலான சுற்றுவேலிகளும் குடிநீர் வசதிக்காக ஒரு கிணறும் அமைக்கப்பட்டது. மாணவர்களின் பாதுகாப்புக் கருதி, பெற்றோர்களினால், கிணற்றைச் சுற்றி சீமெந்தினால் உயரமான பாதுகாப்புக் கட்டும் கட்டிக் கொடுக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் முன்பள்ளிச் செயற்பாட்டிற்கான இடவசதி போதாமையால் பள்ளியின் ஒரு பகுதி மாணவர்களுக்கு இப்பள்ளியின் மரத்தின் கீழ் வைத்து கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றன.

இதே ஆண்டில் இந்த முன்பள்ளிக்கு பிரதேச சபையினால் சுற்றுமதில் கட்டித் தரப்பட்டது. அந்நிலையில் 65 மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் மூன்று ஆசிரியர்கள் சேவையாற்றினர். இந்நிலையில் இடப்பற்றாக்குறை நிலவியதால் அதனை நிவர்த்தி செய்ய இராணுவத்தினர் மற்றொரு கட்டடத்தினையும் அமைத்துக் கொடுத்தனர். இக் கட்டடம் 2013இல்



திருந்து வைக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு மேலும் ஒரு கட்டடம் பிரதேச சபையினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அத்துடன் வெளிக்கள விளை யாட்டு உபகரணங்களும் நாடாளுமன்ற உறுப்பின ரால் வழங்கப்பட்டன.

### கலை, பண்பாட்டு நிகழ்வுகள்:

2014 ஆம் ஆண்டு இங்கு சேவையாற்றும் ஆசிரியர் களுக்கு ஆறுதல் நிறுவனத்தினால் டிப்ளோமா கற்கைநெறிப் பயிற்சியும் வழங்கப்பட்டது. தற்பொழுது இந்த முன்பள்ளியில் 5 ஆசிரியர்கள் சேவை செய்து வருகின்றனர். மேலும் இம் முன்பள்ளியின் மாணவர்கள் பிரதேச மட்டம், வலைய மட்டம், வட மாகாண மட்டம் ஆகிய நிலைகளில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள், மற்றும் விளையாட்டுப் போட்டி களில் பங்குபற்றித் தமது ஆற்றல்களையும், ஆளுமை களையும் வெளிக்காட்டி வருகின்றனர்.

### வளங்களின் உச்சப் பயன்பாடு:

காந்திஜி முன்பள்ளியில் வளங்கள் பற்றாக்குறை நிலவிய போதிலும், இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி முடிந்த வரையிலும் மாணவர்களைக் கற்றல் செயற்பாடுகளில் மட்டுமின்றி, இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள் ஈடுபடுத்தி வருகின்றமையால், முன்பள்ளியும் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

இந்த முன்பள்ளியின் தேவைகளை இனங்கண்டு, கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் நடாத்திச் செல்வதற்கு வலயக் கல்வித் திணைக் களமும், மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர், இணைப்பாளர்கள் ஆகியோரும் உதவி புரிந்து வருகின்றனர். அவர்களால் வழங்கப்படுகின்ற ஊக்கு விப்புக்களின் காரணமாக மாணவர்கள் விரும்பக் கூடிய வகையில் மகிழ்ச்சியூட்டும் விளையாட்டுக் கள் மற்றும் ஆடல் பாடல்களுடன் கற்றல் கற்பித் தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

வளர்ந்து கொண்டிருக்கும் காந்திஜி முன்பள்ளிக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் பல வழிக ளில் உதவி செய்து வருகின்றது. எதிர்காலத்தில் இந்த முன்பள்ளியானது ஒரு 'மாதிரி முன்பள்ளி யாக' மாற (Model Pre School) வேண்டும் என்ற இலக்கை நோக்கிப் பாடசாலை சமூகமும், பொது அமைப்புக்களும் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றன.

இங்குள்ள மழலைச் செல்வங்களுக்கு ஆசிரியர் கள் அன்பினால் உரமிட்டு நல்லறிவு நீரூற்றி வருகின்றனர். 'வடலிகள் வானுயரும்' என்ற கோட் பாட்டின் அடிப்படையில் வழிகாட்டுவதே இந்த முன்பள்ளியின் ஆசிரியர்களினதும், நிர்வாகிகளி னதும் குறிக்கோளாக விளங்குவதால், இந்த முன் பள்ளி மேலும் முன்னேற 'வடலிகள்' சஞ்சிகை தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது ○



# பழக்கத்திற்கு அடிமை ஆகாதே!

- ஐரோப்பிய குட்டிக் கதை -

ஒரு நாள் ஒருவன் அவன் வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத் தொடங்கின.

அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன் ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.

அந்தப் பந்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப் பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக் கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.

இதைத் தெரிந்து கொண்ட மனிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடல் கரை நோக்கி உடனே புறப்பட்டான்.

அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக் கெட்டிய தூரம் வரை கருங்கூழாங்கற்கள் கிடந்தன. அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக் குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

பல மாதங்களும் வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை. அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறிந்தான்.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்குமுன் கடலில் தூர எறிந்து விட்டான்.

**செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை. பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தவிர்க்க வேண்டும்.**



# விதியை மாற்றி அமை!


ஒரு முறை ஜப்பானிய ராஜா எதிரிகளை தாக்க இராணுவப் படை ஒன்றை தயார் செய்து, போருக்கு தயாரானார். எப்படியும் இந்த போரில் வெற்றி பெறுவோம் என்று அவர் நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால், அந்தப் படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந்தனர்.

இதனால் அந்த ராஜா தன் படை வீரர்களுக்கு தைரியத்தை வரவழைக்க என்ன செய்யலாம் என்று ஒரு ஜென் துறவியைப் பார்த்து, கேட்கச் சென்றார். அப்போது அந்த துறவி ராஜாவிடம், ஒரு யோசனையை சொன்னார். அதே போல் ராஜாவும் செய்தார்.

அது என்னவென்றால், அந்த ராஜா போர் செல்லும் வழியில், அவர்கள் குலதெய்வ கோவிலில் நிறுத்தி பிரார்த்தனை செய்து, ஒரு நாணயத்தை எடுத்து வீரர்களின் முன் "நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றி விடுவேன், தலை விழுந்தால் நாம் வெற்றி பெறுவோம் இல்லையேல் போரில் தோற்போம்" என்று துறவி சொன்னதைச் சொல்லி, பின் அவர்களிடம் "நம் தலை விதியை இந்த நாணயம் சொல்லும்" என்று கூறி நாணயத்தை சுழற்றினார்.

அனைவரும் அதை கூர்ந்து கவனித்தனர். அப்போது தலை விழுந்தது. அதனால் அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கையுடனும் சந்தோசத்துடனும் எதிரிகளை தாக்கி வெற்றிப் பெற்றனர். யுத்தத்திற்கு பின்னர், துணை மந்திரி "விதியை யாராலும் மாற்ற முடியாது." என்று ராஜாவிடம் சொல்ல ஆம், என்று ராஜா சொல்லி அந்த நாணயத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதை காண்பித்தார்.

**நம்பிக்கையுடன் செயல்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றி அமைக்கலாம்.**



1. இரு கொம்புகள் உண்டு
மாடு அல்ல, வேகமாய் ஓடும்
மான் அல்ல, கால்கள் உண்டு
மனிதனல்ல. - அது என்ன?



# விடுகதைகள்

**விடுகதைகள் என்பது வெறும் விளையாட்டல்ல. நமது சிந்தனைகளுக்கு ஒரு பயிற்சியும் ஆகும்.**

2. இடி இடிக்கும், மின்னல் மின்னும்,
மழை பெய்யாது - அது என்ன?

3. உயிர் இல்லாத நீதிபதியிடம்
ஒழுங்கான நியாயம் - அது என்ன?

4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும்
ஆரவாரம் இராது - அவர்கள் யார்?

5. உடல் சிவப்பு, வாய் அகலம்,
உணவு காகிதம் - நான் யார்?

6. காகிதத்தைக் கண்டால் கண்ணீர்
விடும் அது என்ன?

7. தாடிக்காரன், மீசைக்காரன், கோயிலுக்குப்
போனால் வெள்ளைக்காரன் அது என்ன?

8. சிவப்புப் பைக்குள் சில்லறை
கொட்டிக் கிடக்குது அது என்ன?

9. ஐந்து அடுக்கு நான்கு
இடுக்கு அது என்ன?



**விடைகள்:**

1.சைக்கிள் 2.பட்டாசு 3.தராசு
4.எறும்புக் கூட்டம் 5.அஞ்சல் பெட்டி
6.பேனா 7.தேங்காய 8.காய்ந்த மிளகாய் 9.விரல்கள்

## சொர்க்கம் – நரகம்



ஒரு நாள் ஒரு ஜென் துறவியிடம் ஒரு சாமுராய் வீரர் வந்தார். ஜென் துறவி அமைதியாக அமர்ந்திருந்தார். சாமுராய் வீரர் துறவியிடம் ஒரு சந்தேகம் கேட்க வேண்டும் என்று சொன்னார். துறவி புன்னகையுடன் தலையசைத்தார். சாமுராய் வீரர் "ஐயா எனக்கு சொர்க்கத்திற்கும் நரகத்திற் கும் வித்தியாசம் தெரியப் படுத்துங்கள்" என்றார்.

துறவி பதிலேதும் சொல்லாமல் சிரித்துக் கொண்டிருந்தார். சாமுராய்க்கு தலைக்கு மேல் கோபம் வந்து விட்டது. தனது சாமுராய் வாளை உறுவிக்கொண்டு "உன்னை மதித்துக் கேள்வி கேட்பவனை அவமதிப்பாயா?" என்று உறுமினார். துறவி புன்னகை மாறாமல் "இப்போது நீர் நரகத்தில் இருக்கிறீர்" என்றார்.

இதைக் கேட்ட சாமுராய் சற்றே தெளிவு பெற்றவராய் உடனே பின்வாங்கினார். துறவியைப் பணிந்து வணங்கி "ஐயா, அறியாமல் செய்து விட்டேன். மன்னித்து விடுங்கள்" என்று சொன்னார். இப்போதும் அதே புன்னகையுடன் துறவி சொன்னார்.

"நீர் இப்போது சொர்க்கத்து வந்து விட்டீர்".



## மரம் வளர்ப்போம்!

தாத்தா வைத்த தென்னையுமே,
தலையால் இளநீர் தருகிறது!

பாட்டி வைத்த கொய்யாவும்,
பழங்கள் நிறைய கொடுக்கிறது!

அப்பா வைத்த மாஞ்செடியும்,
அல்வா போல பழம் தருது!

அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது!

அண்ணன் வைத்த மாதுளையும்,
கிண்ணம் போல பழுக்கிறது!

சின்னஞ் சிறுவன் நானுமொரு
செடியை நட்டு வளர்ப்பேனே!

## யாழ் தோன்றிய கதை

தமிழ் மக்களிடையே முதன் முதலில் தோன்றிய யாழ், வில் யாழ் என்பதாகும்.


பண்டைக் காலத்தில் காடுகளில் மாடுகளை மேய்த்த இடையன் ஒருவன் உள்ளே துளையுடைய குமுழமரக் கொப்பை வில் போல வளைத்து, மர நார்க் கயிற்றை நரம்பாகக் கட்டி அதிலிருந்து ஓசை எழுப்பினான். அதன் வளர்ச் சியே வில் யாழ் ஆயிற்று.

இடையன் ஒருவன் தானே செய்த வில் யாழில் குறிஞ்சிப் பண்ணை வாசித்து மகிழ்ந்த செய்தியை கடியலூர் உருத்திரக் கண்ணார் என்ற புலவர் பெரும் பாணாற்றுப் படை என்ற நூலில் எடுத்துக் கூறியுள்ளார்.



வரலாற்று காலத்துக்கு முந்திய கண்டுபிடிப்பே வில் யாழ் ஆகும். இதை அடிப்படையாகக் கொண்டே பின்னர் சீறி யாழ், பேரி யாழ், செங்கோட்டு யாழ், சகோட யாழ் என்று பல விதமான யாழ்கள் தோன்றின.

ஆயிரம் நரம்பு கொண்ட யாழ் கூட இருந்ததாகக் கூறப்படுகின்றது. அதற்கு பெருங்கலம் என்று பெயர்.



# ஆபத்து ! காப்பாற்று! !



ஆங்கிலேயப் பண்ணையில் ஒரு எலி வாழ்ந்து வந்தது. பண்ணைக்கு சொந்தக்காரனும் அவன் மனைவியும் பண்ணையில் ஒரு கோழியும், பன்றியும், மாடும் வளர்த்தனர்.

எலி செய்த அட்டூழியம் தாங்க முடியவில்லை. ஒருவருக்கும் எலி அங்கே இருப்பது பிடிக்கவில்லை. ஒரு நாள் பண்ணைக் காரனும் அவன் மனைவியும் சந்தைக்குப் போய் வரும் போது எதையோ காகிதத்தில் சுற்றி வாங்கி வந்ததை சுவற்றுப் பொந்தில் இருந்து எலி பார்த்தது. அந்தச் சாமான் ஒரு எலிப் பொறி என்று கண்டதும் திடுக்கிட்டுப் போனது.

உடனே கோழியிடம் போய் "என்னைக் கொல்ல எலிப்பொறி வாங்கி வந்திருக்கிறார்கள். நான் என்ன செய்யட்டும்" என்று கேட்டது. கோழியோ "இது என் பிரச்சினையே இல்லை. நானா பொறியில் மாட்டிக் கொள்ளப் போகிறேன்? உன் பிரச்சினையை உன்னிடமே வைத்துக் கொள்" என்று சொல்லி விட்டு தரையைக் கொத்த ஆரம்பித்து விட்டது.

பிறகு எலி பன்றியிடம் போய் முறையிட்டது. பன்றி அதைக் காதிலேயே வாங்கவில்லை. மாட்டிடம் போனால் அதுவும் "போ போ. எனக்கு வேறு வேலை பார்க்க வேண்டும்" என்று துரத்தி விட்டது. எலியும் வேறு வழி தெரியாமல் தினமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தன் வாழ்க்கையைத் தொடர்ந்தது.

ஒரு நாள் நடு இரவில் எலிப்பொறி பட்டென்று மூடும் சத்தம் கேட்டது. பண்ணைக்காரன் மனைவி இருட்டில் தடவிக் கொண்டே என்னவென்று பார்க்கப் போனாள். பொறியில் ஒரு பாம்பின் வால் மாட்டிக் கிடந்ததை அறியாமல் பொறியில் கை வைக்கப் போய், அந்தப் பாம்பு அவளைக் கடித்து விட்டது. நச்சின் வீரியம் தாங்காமல் படுத்த படுக்கையாய் கிடந்தாள்.

வைத்தியர் வந்து பார்த்தார். அவளுக்குக் கோழி சூப் வைத்துக் கொடுத்தால் ஒரு வேளை அவளுக்கு நஞ்சை எதிர்க்கும் சக்தி கூடலாம் என்று யோசனை சொன்னார். பண்ணைக்காரன் அன்றிரவே கோழியை அடித்து சூப் வைத்து மனைவிக்குக் கொடுத்தான்.


நாளுக்கு நாள் மனைவியின் உடல் நலம் குறைந்து கொண்டே போனது. உற்றார் உறவினர் எல்லாம் நலம் விசாரிக்க வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு சாப்பிடக் கொடுக்க ஏதும் இல்லை என்று ஒரு நாள் பன்றியைக் கொன்று இறைச்சியாக்கி விட்டான் அந்த பண்ணைக்காரன்.

நோய்க் கொடுமை தாங்க முடியாமல் ஒரு நாள் மனைவி இறந்தே போனாள். அவளுடைய ஈமச் சடங்கிற்காக உற்றம் சுற்றம் எல்லாம் திரண்டு வந்திருந்தார்கள். அவர்களுக் கெல்லாம் சாப்பாடு போடக் காசும் தானியமும் கையில் இல்லை. வேறு வழியில் லாமல் பண்ணைக்காரன் மாட்டையும் அடிக்க வேண்டியதாயிற்று.



**நீதி: கூட இருப்பவர்களுக்கு ஆபத்து என்றால் அதை அசட்டையாகப் புறம் தள்ளாதே. உனக்கான ஆபத்தும் அதில் ஒளிந்திருக்கக் கூடும்.**





# ஏமாந்த சிறுத்தை

**கிழக்கு ஆபிரிக்க குட்டி கதை**

ஒரு நாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அப்போது ஒரு கறுப்பு மானையும் ஒரு புள்ளி மானையும் கண்டது.

அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரத்தருகே சென்றது. ஆனால் எதனைத் தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

அதே நேரத்தில் சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஒரு இட த்தில் இடது வலது பாதைகளில் ஓடின.

சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. எதைத் துரத்தலாம் என்று தயங்கி நின்றது. பிறகு,சரி. கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான் சுவையாக இருக்கும் என்று முடிவு செய்து கறுப்பு மானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால் அதற்குள் அது தொலைதூரம் ஓடிப் போய் விட்டது.

உடனே சிறுத்தை அது வேகமாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. புள்ளி மானைப் பிடிக்கலாம் என்று தீர்மானித்து மற்ற பாதையில் ஓடியது. ஆனால் புள்ளிமான் எப்போதோ பஞ்சாய்ப் பறந்துவிட்டிருந்தது.

**தருணத்தின் முக்கியம் அறிந்து முடிவை விரைவாக எடுக்க வேண்டியது அவசியம்.**

## வித்தியாசம்

வெள்ளை முயல் வேகமாக
ஓடலானது
வேட்டை நாயும் அதைத் துரத்தி
விரட்டலானது
துள்ளித் துள்ளி அந்த முயல்
அதிகம் தூரத்தை
துரிதமகக் கடந்து சென்று
மறையலானது

முயலைத் தொடர்ந்து
வேட்டை நாயும்
அயர்ந்து போனது
மூச்சுத் திணற ஓரிடத்தில்
அமர்ந்து விட்டது
வயலில் ஆடு மேய்ந்த சிறுவன்
இதனைக் கண்டனன்
வந்து வேட்டை நாயிடத்தில்
கேட்கலாயினன்

சின்னஞ்சிறிய முயலைப் பிடிக்க
முடியவில்லையே!
தீரன் வேட்டை வீரன் என்று
பெருமை கொள்வதேன்?
என்ன காரணத்தினாலே
தோல்வி வந்ததோ?
என்று கேட்க வேட்டை நாயும்
பதிலுரைத்தது

எனக்கும் அதற்கும் உள்ளதான
வித்தியாசத்தை
எளிதில் அறிந்து கொள்ளலாமே
தெரியவில்லையா?
உணவுக்காக தொடர்ந்து சென்ற
எனது ஓட்டத்தால்
உயிரைக் காக்க ஓடும் முயலை
வெல்ல முடியுமோ?

# கடைசி வீடு

ஒரு ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் ஆளில்லாத நிலத்தை வாங்கி அவற்றில் வீடு கட்டி விற்கும் தொழில் செய்து வந்தார். தன் தொழிலுக்கு உதவியாக ஒருவரை வேலைக்கு அமர்த்தியிருந்தார். அவர் மிகவும் நேர்த்தியான, அழகான வீடுகளைக் கட்டுவதில் திறமைசாலி. அவர் கட்டும் வீடுகள் உடனே நல்ல விலைக்குப் போயின. பலரும் காத்திருந்து வாங்கினார்கள்.

வியாபாரம் கொழித்தது. தனவந்தரும் உதவியாளரை நல்ல சம்பளம் கொடுத்து சிறப்பாகக் கவனித்துக் கொண்டார். உதவி யாளருக்கு வயது கூடியதும், தான் ஓய்வு பெற்றால் நல்லது என்று நினைத்தார். தனவந்தரிடம் அந்த யோசனையைச் சொன்ன போது அவருக்கும் அது சரியென்றே பட்டது. ஆனாலும் அவர் உதவியாளரைப் பார்த்து 'தம்பி, நீ எவ்வளவோ செய்து விட்டாய். உனக்கு வாழ்க்கையில் ஓய்வு தேவைதான். எனக்காக இறுதியாக ஒரு வீடு கட்டிக் கொடுத்து விட்டுப் போ" என்று கேட்டுக் கொண்டார்.


உதவியாளருக்கு தனவந்தர் மேலும் வேலை சொன்னது கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஓய்வு கேட்டால் வேலை சொல்கிறாரே என்று கோபப்பட்டார். ஆனாலும் பல நாளாக தன்னைப் பார்த்துக் கொண்ட மனிதரிடம் கொண்ட நன்றியறி தலால் ஒன்றும் பேச வில்லை.

வேண்டா வெறுப்பாக அந்தக் கடைசி வீட்டைக் கட்டினார். வழக்கமாக இருக்கும் தரம் அதில் இல்லை.

கட்டி முடித்த அன்று தனவந்தர் வந்தார். வீட்டின் சாவியை உதவியாளரிடம் ஒப்படைத்து, "தம்பி இந்த வீட்டையே உனக் காகத்தான் கட்டினேன். உன் ஓய்வு காலத்திற்கு இது உதவும். வைத்துக் கொள்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

உதவியாளருக்கு திடுக்கென்று இருந்தது. நமக்கு என்று தெரிந்திருந்தால் இன்னமும் கவனம் எடுத்து சிறப்பாகச் செய்திருக்கலாமே என்று வெகுநேரம் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

**நாமும் நமது இளம் வயதில் நம் யோசனைத் தெரிவுகளாலும் செய்கைத் தெரிவுகளாலும் நமது எதிர்காலம் என்ற வீட்டைக் கட்டுகிறோம். அதில்தான் வாழப் போகிறோம் என்று யோசித்துச் செய்பவர்கள் எப்போதுமே சிறப்பாக வாழ்கிறார்கள்.**



# சிங்கத்தின் பங்கு

ஆபிரிக்கக் குட்டிக் கதை

சிங்கமும் கழுதைப்புலியும் பசுவைப் பிடித்து வைத்திருந்தன. ஒரு நாள் சிங்கம் பசுவைக் கொன்றது. கழுதைப்புலி தன் குட்டியை சிங்கத்திடம் அனுப்பி தன் பங்கைக் கேட்டது. கழுதைப்புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்து அனுப்பியது சிங்கம்.

கழுதைப் புலியோ,"நீ ஏன் குடலைக் கொண்டு வந்தாய்? அரைவாசிப் பங்குதானே நமக்கு உரியது?" என்று கேட்டது.

குட்டி கழுதைப்புலி சொல்லியது: "நான் சின்னப்பயல். பெரியவர்கள் கொடுப்பதைத் தான் கொண்டு வர முடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும்".

அதைக்கேட்டு கோபமான கழுதைப்புலி அந்தக் குடலோடு சிங்கத்தைப் பார்க்கப் போனது. சிங்கம் உணவை உண்டு குகைக்குள் ஓய்வெடுத்துக் கோண்டிருந்தது. கழுதைப்புலி வந்ததைக் கண்டு கண்களை அச்சமூட்டும் வகையில் வைத்திருந்தது. "ஏன் இங்கே வந்தாய்?" என கர்ஜித்தபடி சிங்கம் கேட்டது.

பசுவில் பாதி கேட்க வந்த கழுதைப்புலி தற்போது தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு பேசியது: "ராஜ சிங்கமே! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி, ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து விட்டோம்".

குடலை சிங்கத்திடம் கொடுத்து விட்டு திரும்பிய கழுதைப்புலியிடம் குட்டி கேட்டது: "பசுவில் பாதி கேட்கப்போன நீங்கள் குடலையும் கொடுத்து விட்டு வருகிறீர்களே?"


"மகனே! சிங்கம் மிகக் கொடூரமாக இருந்தது. அதைக் கண்டு நடுங்கி விட்டேன். எனவே எனது பங்கையும் கொடுத்துவிட்டுப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காக" என்றது தாய் கழுதைப்புலி.

**நம்மை விட வலிமையானவர்களைக் கோபப்படுத்துவதை விட அவர்களை சாந்தப்படுத்துவதே பாதுகாப்பானது.**


ஒருநாள் மன்னன் அக்பர் தன் மந்திரிகளின் அறிவுத் திறனை சோதிக்க அவர்களைஅழைத்தான்
நான் இங்கே உங்களை அழைத்ததன் காரணம்...
மூன்று பொம்மைகள்
இங்கே மூன்று பொம்மைகள் உள்ளன.
இவை பெர்சிய மன்னரால் அனுப்பப்பட்டவை!
இந்த மூன்று பொம்மைகளும் ஒரே மாதிரியானவையாக இருந்தாலும், ஒவ்வொரு குறையுள்ளது. இதில் ஒன்று மட்டுமே நல்ல பொம்மை!
இதில் எந்த பொம்மை நல்ல பொம்மை என்று கண்டுபிடித்து சொல்லுங்கள்!



அமைச்சர்கள் பொம்மைகளை கவனமாக ஆராய்ந்தனர்.
இதில் எது நல்ல பொம்மை என்று நாம் எப்படி கண்டுபிடிப்பது?
மன்னித்து விடுங்கள் மன்னா! இந்த பொம்மைகளை நாங்கள் பரிசோதித்து விட்டோம். எல்லாமே ஒரே மாதிரித்தான் இருக்கின்றன. எது நல்ல பொம்மை என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை.
உங்கள் திறமை இவ்வளவுதானா?
பீர்பால் உனக்குத்தான் கடைசி வாய்ப்பு. நீ கண்டுபிடி!
என்னால் முடியும் மன்னா!
பீர்பால் மூன்று பொம்மைகளையும் உற்று கவனித்தான்.
மிகவும் வேடிக்கையாக உள்ளதே..


பீர்பால் ஒரு புல்லை எடுத்தான்.
முதல் பொம்மையின் காதில் விட்டான்.
புல் காதைத் துளைத்துக் கொண்டு மறுபக்கம் வெளியே வந்தது.
இந்த பொம்மை உதவாது. ஏனென்றால் இது ஒரு காதில் எல்லாவற்றையும் கேட்டு மறு காதால் வெளியே விடும் மனிதனைப் போன்றது.
பீரபால் அடுத்த பொம்மையை எடுத்து புல்லை காதில் விட்டான். அது வாய் வழியாக வெளியே வந்தது.
இதுவும் நல்ல பொம்மை இல்லை. இது காதால் கேட்டவற்றை எல்லாம் வாயால் வெளியிடும் மனிதனைப் போன்றது.


மூன்றாவது பொம்மையை எடுத்த பீர்பால் புல்லை காதில் விட்டான்.
இந்த முறை புல் வெளியே வரவில்லை.
மூன்றிலும் இதுதான் நல்ல பொம்மை. இது தான் கேட்ட விடயங்களை ஒரு போதும் வெளியிடாது.
அதுமட்டுமல்ல ஒரு மனிதன் இதைப் போன்றுதான் இரகசியங்களை பாதுகாக்க வேண்டும்.
இதுதான் பெர்சிய மன்னர் உங்களுக்காக அனுப்பிய பொம்மை மன்னா. இதன் மூலம் மிகப் பெரிய கருத்தை கூறிவிட்டார்.
வாழ்த்துக்கள் பீர்பால்!
பீர்பால் நீர்தான் எனக்கு சிறந்த மந்திரி!
- முற்றும் -



# தாய்மையின் சக்தி

ஒரு மலைப் பிரதேசத்தில் மலை உச்சியில் ஓர் இனத்தாரும், அடிவாரத்தில் இன்னொரு இனத்தாரும் வாழ்ந்து வந்தார்கள். இரு இனத்தாருக்கும் எப்போதும் பகை.

ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் அடிவாரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள்.

சமூகத்திலிருந்த சில பெரியவர்கள், மலைமேல் இருந்த சமூகத்தினரிடம் சமாதானமாகப் போய் பேசினால் குழந்தையை மீட்டு வந்து விட சாத்தியம் இருப்பதாக ஊரில் உள்ள இளைஞர்களிடம் அறிவுரை கூறினர்.

இளைஞர்கள் சிலர் உடனே முன்வந்தார்கள். அவர்கள் கடினமான வேலைகள் செய்து பழகியவர்கள். எந்தச் செயலை எடுத்தாலும் அதை விடா முயற்சியுடன் முடிக்கும் மனப்போக்கைக் கொண்டவர்கள். ஊர் பெரிய வர்களும், இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் சிறந்தவர் கள் என்று அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள்.



இளைஞர்களும் ஆர்வத்துடன் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. அந்த இளைஞர்களால் அப்படி ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை. விடாமுயற்சியுடன் அப்பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர். களைத்துப் போனால் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் முயற்சித்தனர்.

அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள். அவள் அருகில் வந்தவுடன் "நாங்கள் ஏற சிரமப்பட்ட மலையை நீ ஏறிச் சென்று விட்டாயே! எப்படி?" என்று வியப்புடன் கேட்டார்கள்.

அவள் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி "இது உங்கள் குழந்தை இல்லை. என் குழந்தை. அதுதான் வித்தியாசம்" என்று பதில் சொன்னாள் ●



**இரவில் மரங்களின் கீழ் ஏன் படுத்துறங்கக் கூடாது?**

பகல் நேரங்களில் மரத்தினடியில் படுத்துறங்குவதால் தவறில்லை. ஆனால், இரவு நேரங்களில் மரத்தடியில் படுப்பது பெரிதும் தீங்கானது. பகல் நேரத்தில் தாவரங்கள் காற்றிலுள்ள கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளியிடுகின்றன. அதனால் மரத்தடியில் படுப்பவருக்கு பாதிப்பு ஏற்படாது. ஆனால், இரவில் மரங்களும் காற்றிலுள்ள பிராண வாயுவை உட்கொண்டு, கரியமில வாயுவை வெளியிடுகின்றன. அதனால் மரத்தடியில் படுப்பவருக்கு, சுவாசிக்கத் தேவையான அளவுக்கு வேண்டிய பிராண வாயு கிடைக்காது. கரியமில வாயுவையே சுவாசிக்க நேரும். அதனால், இரவில் மரத்தடியில் படுப்பவரின் உடல்நலம் பாதிக்கப்படும்.

1. சிறுத்தையால் சிங்கத்தைப் போல் கர்ஜிக்க முடியாது. பூனையைப் போல மியாவ் என்ற ஓசையைத்தான் எழுப்ப முடியும்.

2. ஒட்டகப் பறவை என்று தீக்கோழி அழைக்கப்படுகிறது. இது ஒட்டகத்தைப் போல பல நாட்கள் தண்ணீர் குடிக்காமலேயே வாழக்கூடியது என்பதால் அதற்கு இந்தப் பெயர்.


3. மரங்கொத்திப் பறவையால் ஒரு நொடிக்கு 20 முறை மரத்தைக் கொத்தித் தள்ள முடியும்.

4. காகம் ஒரு மணிக்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும்.

5. டொல்பின்கள் ஒரு கண்ணை மட்டும் மூடிக் கொண்டு தூங்கும்.



**திமிங்கிலங்கள் அடிக்கடி தம் தலைப் பகுதியிலிருந்து நீரை ஊற்று போல் பீய்ச்சிடுவது ஏன்?**



திமிங்கிலங்கள் தம் தலைப் பகுதியிலிருந்து நீரை பீய்ச்சிடுவதைக் கொண்டே கடலில் செல்லும். ஆனால், உண்மையில் திமிங்கிலம் பீய்ச்சிடுவது தண்ணீர் அல்ல! சுடு நீரும் வாயுக்களும் ஆகும்.

கடலினுள் நீண்டநேரம் இருக்கும் திமிங்கிலத்தின் நுரையீரலில் இருந்து வெளிப்படும் காற்று (மூச்சு - வெளியிடும் காற்று - முக்கியமாக கரியமில வாயு) மற்றும் நீர்ச்சத்து மிகவும் சூடாகின்றது.

இந்நிலையில் கடலின் மேற்பரப்புக்கு வரும் திமிங்கிலம் தன் தலைப்பகுதியில் உள்ள ஓர் நாசித் துவாரத்தைத் திறந்து நுரையீரலில் தேங்கிய கழிவுப் பொருளான கரியமிலவாயு மற்றும் வெப்பம் மிகுந்த நீர்ச்சத்தினை வேகமாகக் கடலின் குளிர்ந்த நீர் வழியே பீய்ச்சி அடித்து வெளியேற்றுகின்றது.

## எமது வெளியீடுகள்

























தொடர்புகளுக்கு
இல. 51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
தொலைபேசி : 021 221 7092, தொலைநகல்: 021 221 7092
மின்னஞ்சல் : aaruthaltrinco@gmail.com இணையதளம் : www.aaruthal.lk